RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணன் சிறுகதைகள் உணர்த்தும் பெண்மையின் இருப்பு

**ரெ. சாந்தா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர்கல்லூரி, திருச்செந்தூர்-628215, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா,

# Existence of Womenhood in Rajam Krishnan's Short Stories

**R. Santha** [a, *]

[a] Department of Tamil, Govindammal Aditanar College for Women, Tiruchendur – 628215, Thoothukudi, Tamil Nadu, India

*Corresponding Author:
santhaviji.sv@gmail.com

Received: 17-12-2025
Revised: 25-02-2026
Accepted: 11-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

This article aims to explain the existence of womanhood as conveyed through Rajam Krishnan's short stories, which attempt to bring about change in the cultural construction that places women beneath men by presenting various perspectives on femininity and exposing male-dominated power structures. In the context of Indian social structure, women's lives have traditionally been shaped by conditioning them to suppress their own likes and dislikes and to live in dependence on men. This mode of existence has long been regarded as the accepted tradition of women's lives. Rajam Krishnan's short story "Kaipidiththē Kādaloruvanai" vividly portrays a social attitude that praises the confinement of women to the kitchen as a sign of domestic skill, while in reality pushing them into a metaphorical grave. The story presents a mother who believes it is her duty to guide her daughter's life, yet insists that a woman's rightful place is in her husband's home. Here, it can be said that women's ignorance itself contributes to the continuation of male dominance. Rajam Krishnan's stories also challenge the social condition in which education is seen as a matter of pride for men but viewed as an act of arrogance when pursued by women. Moreover, her stories strongly highlight the continued presence of social representations that portray men as powerful and women as submissive to them, revealing that such attitudes remain deeply rooted even today.

**Keywords:** Woman Centric Society, Rajam Krishnan, Dominance, social representations.

## முன்னுரை

இராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகள் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள், சமூக அமைப்புகளால் பெண் கட்டுப்படுத்தப்படும் விதம், வாய்ப்புகளே வழங்கப்படாமல் மரபைச் சுமந்து நிற்கும் பெண்மையின் இருப்பு பற்றிய பார்வைகளையும், ஆண்களின் ஆதிக்க அதிகாரத்தை வெளிப்படுத்துவதன் மூலம் ஆணுக்குக் கீழ் பெண் என்ற பண்பாட்டுக் கட்டமைப்பில் மாற்றம் விளைவிக்க முயல்வதையும், பெண்மையின் இருப்பு பற்றியும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## பெண்மை சார் சமூக மரபு

இந்திய சமூக கட்டமைப்பைப் பொருத்தமட்டில் பெண்ணின் வாழ்வானது குடும்பம் என்னும் நிறுவனத்தில் இருந்து பிரித்தறிய இயலாத நிலையிலே உள்ளது எனலாம். இத்தகு செயலானது பெண்மைக்கு வகுக்கப்பட்ட மரபார்ந்த பண்பாட்டு நிலையாகவே கருதப்பட்டு வருகிறது. எனவே பெண்கள் தங்களது விருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளியும், ஆணைச் சார்ந்தும் வாழ

பழக்கப்படுத்தப்பட்டனர். இதுவே பெண்மையின் வாழ்வியல் மரபாகக் கருதப்பட்டது. இந்நிலைப்பாடு குறித்து பதிவிடும் நவீன கவிஞரின்,

“கட்டில் அறைக்கும் சமையல் அறைக்கும்

ரன்கள் எடுத்தே ரணமாகிப் போனாள்” (திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப. 19)

என்ற கவிதை பெண்மையின் இருப்பு உணர்த்தும் பதிவாகும். இத்தகைய நிலைப்பாடுகள் இராஜம் கிருஷ்ணன் கதைகளிலும் காணப்படுகிறது.

## மரபும் பெண்மை ஏற்பும்

தொடக்க காலத்தில் இருந்தே பெண் என்பவள் தனக்கு வகுக்கப்பட்ட பண்பாட்டில் நின்று மரபு நிலை வழுவாமல் வாழ்ந்து வருவதோடு, ஆணாதிக்கச் சமூகத்தால் வரையறுக்கப்பட்டு வேரோடிய பழக்க வழக்கங்களைத் தானே ஏற்று வாழும் சூழலுக்கு ஆட்படும் நிலை நிலவி வருகிறது. வள்ளுவரின்,

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை. (குறள். 55)

என்ற குறளும் தெய்வத்தை வணங்காமல் கணவனை வணங்கும் மனைவியின் மாண்புக்கு இயற்கையும் செவிமடுக்கும் எனக் கூறும் போது பெண்ணையையே அதனை விரும்பச் செய்யும் உத்தியும் உள்ளீடாகும் என்பது சிந்திக்கத்தக்கது. பெண்ணைச் சமையலறையில் முடக்கிய நிலைப்பாட்டைக் கைப்பக்குவம் எனப் பாராட்டி புதைகுழியில் ஆழ்த்தும் நிலையை இராஜம் கிருஷ்ணனின் 'கைப்பிடித்தே காதலொருவனை' என்னும் கதை உணர்த்தி நிற்கிறது. இதனை, தன் மாமியாரின் சமையல் திறனையும், 65 வயதிலும் அவரின் விரைவையும் கண்ட வியக்கும் மருமகள் ரஞ்சனி வழி உணர்த்தி நிற்கிறார்.

மன முடித்த இரண்டு மாதங்களில் கணவனது தகாத நடத்தைகளால் விரட்டி விடப்பட்ட 'கண்ணுக்குத் தெரியாத சங்கிலிக் கணுக்கள்' என்னும் கதையில் வரும் புவனியின் நிலை கூறும் அவளது தாய், “அடியோ உதையோ புருஷன் வீடு. இங்கே தம்பி வீட்டு புழுக்கச்சியாக இருப்பதில் என்ன சுகம்? அதுதான் உரிமை.” (ப. 141) என்று கூறும் இடத்திலும், மகளின் அவலம் கண்டு அதனை எதிர்க்காமல் அதனை ஏற்கும் பெண்மையே பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு புறக்கணிக்கப்பட்ட பெண்ணிற்கு வாழும் வழியை வகுத்தளிக்கும் கடமைப்பாடுடைய தாயும் அவள் கணவன் வீட்டில் வாழ்வதே உரிமை எனப் பேசும் நிலை காணப்படுகிறது. இங்கு, பெண்மையின் அறியாமை ஆண்களின் ஆதிக்க நிலையைப் பகிர்கிறது எனலாம். இங்கு, “அவள் படிக்காமல் முட்டாளாக இருந்தால் குடும்பம் உடையாமல் நிலைபெறும் என்ற ஆணாதிக்கத்தின் உச்சகட்ட எண்ணம் வெளிப்பட்டு நிற்கிறது.” (பெண் மரபிலும் இலக்கியத்திலும், ப.10) என்னும் பிரேமாவின் கருத்து சிந்திக்கத்தக்கது.

## பாலின பாரபட்சம்

காலம் காலமாய் சமூகத்தில் இழையோடும் பாலினப் பாகுபாடு இன்று வரை தொடர்ந்து வருகிறது. “உடலின் வன்மை - மென்மை கூறுகளின் அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வகுக்கப்பட்ட அறங்கள் பாரபட்சமானவை.” (அறம் அதிகாரம் ப. 144) எனும் நிலைப்பாடே காணப்படுகிறது. 'கைப்பிடித்தே காதலொருவனை' என்ற சிறுகதையில் காதலியைத் தன் தந்தையிடம் அனந்த் அறிமுகப்படுத்தும் போது, அவளது கல்வி பற்றி விசாரித்துவிட்டு அவளை ஒடுக்கும் எண்ணம் மேலோங்கி நிற்பதை உணர முடிகிறது. இதனை, “எம்.ஏ இங்கிலீஷ் லிட்ரேச்சர் எடுத்தேன். பி.எச்.டி தீஸிஸீம் சீக்கிரமா முடிச்சிடுவேன் என ரஞ்சனி கூற, ஹ்ம் என்ன பி.எச்.டி? நீங்களல்லாம் பண்ணி என்னத்த கிழிக்கப் போறிய.” (ப.79) என்று இழிவுபடுத்துவதன் மூலம் கல்வி என்பது ஆணுக்குப் பெருமிதமாகவும், பெண்ணுக்குத் திமிர் பிடித்த செயலாகவும் பார்க்கப்படும் நிலையினை அறிய முடிகிறது. ஆக, பாலின பாரபட்சம் என்பது அன்று முதல் இன்று வரை தொடர்ந்து இருந்தே வருகிறது எனலாம்.

## பெண்ணிய ஒடுக்கு முறை

பெண் என்பவளை ஆணின் ஆள்வினைப் பாத்திரமாகவும், ஆணைச் செயலூக்கமான பாத்திரமாகவும் சித்தரிக்கும் போக்கே நடப்பியலில் காணப்படுகிறது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்பதில் இருந்து பட்டங்கள் ஆண்டாலும், சட்டங்கள் செய்தாலும், பெண்மை அடக்குமுறைக்கு ஆட்பட்டே இருந்து வருகிறது.

மணமான பின் ரஞ்சனி தன் மாமனாரின் கொடுமைகளுக்கு ஆட்பட்டு முடங்கிக் கிடந்த தன் மாமியார் மீது அனுதாபம் கொண்டு அவரை மாற்ற முயலும்போது ரஞ்சனியின் கணவனான அனந்த், "இத பாரு! இந்த வம்பெல்லாம், உனக்கெதற்கு? அம்மாவுக்கே அப்பா அப்படி விரட்டினால் தான் பிடிக்கும்" (ப. 83) என்று கூறுவதாக 'கைப்பிடித்தே காதலொருவனை' என்ற சிறுகதை எடுத்துரைக்கிறது. இங்கு மனைவியைத் தனக்கு அடங்கியவளாய் வைக்கச் செய்து அதனை அவளை ஏற்கச் செய்வது ஆணின் அடக்குமுறையைப் பறைசாற்றி நிற்கிறது. இதனை, "டார்வின், ஃபிராய்டு உள்பட அனைவரும் ஆண் வலிமையானவன் என்பதை முதல் விதியாக வைத்தே செயலபட்டனர். இவ்வாறே நவீன சிந்தனையாளர்களும் செய்யப்பட்டுள்ளதால் பெண் தாழ்வானவள் என்ற கருத்தாக்கம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஆழமாக அவர்கள் அறியாமலேயே திட்டவட்டமாகப் பதிந்துவிடுகிறது." (பெண் - மொழி - படைப்பு, ப. 158) என வலியுறுத்தும் கருத்தும் இங்கு சிந்திக்கத்தக்கது.

## முடிவுரை

வாழ்வில் துவக்கம் முதலே பெண் என்பவள் சமூக மரபுகளுக்கு உட்பட்டு வாழ்பவளாகவும், அத்தகு மரபுகளை இயல்பாகவே ஏற்கும் மனநிலை வாய்ந்தவளாகவும், பாலின வேற்றுமைகள், அடக்குமுறைகளுக்கு ஆட்படுகின்ற நிலையையே பெண்மையின் இருப்பாக இருந்து வருவதை இராஜம் கிருஷ்ணனின் கதைகள் வழி உணர முடிகிறது.

## References

Panjangam K, Pen Mozhi Padaippu, Kavya Publications, 2007.

Prema R, Pen Marabilum Ilakkiyathilum, Thamizh Puthagalayam, 2006.

Raj Gowthaman, Aram Athigaram, Neelam Publications, 2025.

Thiruvalluvar, Thirukkural, Kottravai Pathippakam, 2009.

Vairamuthu, Thiruthi Ezhuthiya Theerpugal, Thirumagal Nilaiyam, 2010.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License